விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 220 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 10 வெள்ளிக்கிழமை (26.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



தமிழ்ப் பொது வேட்பாளர்

## 2024 ஜனாதிபதித் தேர்தலில்
# களம் காணவுள்ள வேட்பாளர்கள்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பலர் களமிறங்கவுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க, விஜேயதாஸ ராஜபக்ஷ, சரத் பொன்சேகா மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் களம் காணவுள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தல் திகதி இன்று வெளியிடப்படும்
## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி இன்று உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

"1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக் கமைய ஜனாதிபதியைத் தேர்ந் தெடுப்பதற்கான பிரகடனத்தை வெளியிடும் திகதியும் பெயர் குறித்த நியமனங்களை ஏற்கும் திகதியும் பற்றி அறிவிக்கும் அதி விசேட வர்த்தமானி அறிவித் தலை 2024 ஜூலை மாதம் 26ஆம் திகதி வெளியிடு 02

## பாண் வாங்கச் சென்றவர் ஆட்டோ மோதி மரணம்
### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டியில் பாண் வாங்கச் சென்ற வர் ஆட்டோ மோதிய தில் உயிரிழந்துள்ளார்.

இதில் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளை களின் தந்தையான பொன்னம்பலம் குலேந் திரன் (வயது-69) என்பவரே உயிரி 15

## தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் மரணம்
### தும்பளையில் சம்பவம்

(கரணவாய்)

தீக்காயங்களுக்குள் ளான நிலையில் பருத் தித்துறை ஆதார வைத் தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த மூன்று பிள்ளை களின் தாயார் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தும்பளை, பருத்தித்துறை 15

### சிறையில் படுகொலை செய்யப்பட்ட
## தமிழ் அரசியல் கைதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

சிறைகளிலும் தடுப்பு முகாம் களிலும் தடுத்து வைக்கப்பட் டிருந்த நிலையில், பல்வேறு கால கட்டங்களில் சாவினைத் தழுவிய, 15



## புலிகளைப் பிளவுபடுத்தியதுபோல் ரணில் பெரமுனவை பிளவுபடுத்திவிட்டார்
### ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கியதற்கு எமக்கு கிடைத்த பரிசு - நாமல் விரக்தி



(கொழும்பு)

விடுதலைப் புலிகளைப் பிளவு படுத்தியதுபோல் பெரமுனவை ரணில் பிளவுபடுத்திவிட்டார். ஜனாதிபதிக்கு நாம் வழங்கிய ஆதரவுக்கு 15

## வவுனியா குடிவரவு, குடியகல்வு திணைக்களம் இடமாற்றம்
### சில தினங்களுக்கு சேவைகள் இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியா குடிவரவு, குடிய கல்வுத் திணைக்களம் இடம் மாற்றப்பட்டுள்ளதோடு அதன் சேவைகளும் இடைநிறுத்தப் பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல் வுத் திணைக்களத்தின் வவு னியா, வெளிச்சுற்று வீதியில் அமைந்துள்ள பிராந்திய அலு வலகம், 2024 ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி 15

## கட்டுடையில் வாகன விபத்து
### பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரி விற்குட்பட்ட கட்டுடைப் பகுதி யில் நேற்று மாலை இடம் பெற்ற வாகன விபத் தில் பெண் ஒருவர் 15

## அனலைதீவில் கனேடிய தமிழ் குடும்பம் மீது தாக்குதல்
### சுமார் ஒரு வருடம் பின் பிரதான சந்தேகநபர் கைது


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அனலை தீவில் கனேடிய தமிழ்க் குடும் பம் மீது வன்முறைக் கும்ப லொன்று நடத்திய தாக்குதல் மற்றும் கொள்ளைச் சம்பவம் தொடர்பான பிரதான சந்தேகநபரொருவர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இசைப்பிரியன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளியும், ஊடகவியலாளருமான இசைப்பிரியன் என அழைக்கப்படும் அர்சசுதநாயர் சேகுவாரா நேற்று வியாழக்கிழமை காலமானார்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் உள்ள வாடகை வீடொன்றில் நண்பருடன் தங்கியிருந்த வேளை காலை நெஞ்சு வலிப்பதாக நண்பரிடம் கூறி சில நிமிடங்களில் மயங்கி சரிந்து உயிரிழந்துள்ளார்.

மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

# இளைஞர்கள் பயணித்த காருக்குள் கஞ்சா வைக்க முயன்ற பொலிஸார்

## சமூக ஊடகங்களில் காணொளி வெளியானதால் பரபரப்பு

(கொழும்பு)

இளைஞர்கள் பயணித்த காரை இடைநிறுத்திய பொலிஸார் அதற்குள் கஞ்சா வைக்க முற்பட்டதாக இளைஞர்கள் குழுவொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பான காணொளி ஒன்று சமூகஊடகங்களில் வெளிவந்ததனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் தற்போது விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நேற்று முன் தினம் காலை வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று காரொன்றை சோதனையிட்ட போது இச்சம்பவம் இடம்பெற்றது.

சுமார் ஐந்து பேர் கொண்ட குழுவுடன் கிராண்ட் பாஸில் இருந்து வருகை தந்த காரை பொலிஸ் அதிகாரிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

குறித்த சோதனையின்போது கார் இருக்கையில் கஞ்சா விதைகள் போன்ற பல பொருட்கள் இருப்பதை அவதானித்ததாக தெரிவித்துள்ளனர்.

எனினும், வாகனத்தில் இருந்த பணத்தைக் கண்டறிந்த, பொலிஸார் பணம் பறிப்பதற்காக அதிகாரிகள் காருக்குள் கஞ்சாவை வைக்க முயன்றதாக இளைஞர் குழு குற்றம் சுமத்தியுள்ளனர். எனினும் பொலிஸ் பேச்சாளர் தல்துவ குற்றச்சாட்டை மறுத்துள்ளார். காரில் இருந்தவர்களை கட்டுக்கடங்காமல் நடந்து கொள்ள அனுமதித்ததில் சம்பவ இடத்தில் இருந்த அதிகாரிகள் தவறு செய்ததாகக் கூறியுள்ளார்.

சம்பவம் நடந்த சிறிது நேரத்திலேயே, மூத்த அதிகாரி ஒருவர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து குறித்த இளைஞர்களுடன் உரையாடி பிரச்சினையை சுமூகமாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குங்கள்

## வைகோ நீதிமன்றில் மனு

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதமான தடையை நீக்குமாறு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சட்ட விரோத அமைப்பாக அறிவித்து அந்த அமைப்புக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடித்து இந்திய மத்திய அரசு கடந்த மே 14 அன்று அரசாணை பிறப்பித்துள்ளது.

இதற்காக அமைக்கப்பட்ட டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி மன்மீத் ப்ரீத்தம் சிங் அரோரா தலைமையிலான தீர்ப்பாயம் தடை செய்வது குறித்து ஜூலை 23 ஆம் திகதிக்குள் விளக்கமளிக்க உத்தரவிட்டிருந்தது. அதன்படி, இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தடையை நீக்க வேண்டும். இதுதொடர்பாக மத்திய அரசு பிறப்பித்துள்ள உத்தரவை ரத்து செய்ய கோரி ம.தி.மு.க பொதுச் செயலாளரான வைகோ தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை ஆக.7-க்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# யாழ். பண்டத்தரிப்பில் அழுகிய நிலையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்டத்தரிப்பில் வீடொன்றிலிருந்து அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் பண்டத்தரிப்பு - செட்டிக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த 74 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். இறந்தவரின் வீட்டில் இருந்து கடும் துர்நாற்றம் வீசியதால், அயலவர்கள் அது குறித்து சோதித்த போது சடலம் வீட்டின் முன்புறத்தில் கிடப்பதை அவதானித்து பின்னர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் நீதவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம-7)

# தனது அமைச்சு பதவியை

## இராஜினாமா செய்யவுள்ள விஜேயதாஸ

நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவதற்காக இவ்வாறு பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க, திலித் ஜயவீர, சரத் பொன்சேகா ஆகியோர்கள் தாங்கள் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்று அறிவித்துள்ளனர். (ம-7)




# பொலிஸ்மா அதிபரை

## ஜனாதிபதியால் நியமிக்க முடியாது?

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினால் பொலிஸ் மா அதிபருக்கு மட்டும் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமில்லை என ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனை கிடைத்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி, பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாக இல்லாத நிலையில், ஜனாதிபதியால் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க முடியாது என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, சம்பந்தப்பட்ட சட்டப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை, பொலிஸ் மா அதிபர் பதவி காலியாகவே இருக்கும் என, அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## ஜனாதிபதித்...

வதற்கு இன்றைய தினம் (நேற்று) கூடிய தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

அதேபோல், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகளும் பற்றி தனிப்பட்ட பலரும் பல திறத்தவர்களும் முன்வைக்கும் கருத்து வெளிப்பாடுகள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழு எவ்வித பொறுப்பையும் ஏற்காது என்பது இத்தால் மேலும் அறிவிக்கப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## களம்...


ஜனாதிபதித் தேர்தல் திகதி இன்று அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில் நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா ஆகியோரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக உத்தியோக பூர்வமாக நேற்று அறிவித்துள்ளனர். இதேவேளை தம்மிக்க பெரேராவும் இத் தேர்தலில் களம் காண்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன இதன் காரணமாக இதுவரை இருந்து வந்த ரணில் அநுர சஜித் என்ற மும்முனை தேர்தல் போட்டிக்களமானது விரிசலடைந்து பலமுனை தேர்தல் களமாக மாற்றமடைந்துள்ளது.

எனவே தனித்து பெரும்பான்மையினரின் வாக்குகள் மூலம் அறுதிப் பெரும்பான்மையினை எவரும் பெற முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதோடு சிறுபான்மையினரின் வாக்குகளினையும் பெறும் வேட்பாளர் மாத்திரமே அறுதிபெரும்பான்மையுடன் வெற்றியீட்டி இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதிபதியாகும் வாய்ப்பினை பெறமுடியும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும்

## விஜேயதாச!



(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கப் போவதாக நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

மக்கள் கூட்டணியின் சார்பில் வேட்பாளராகக் களமிறங்குவதாகவும் சின்னத்தை பின்னர் அறிவிப்பதாகவும் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையினதும், இலங்கை மக்களினதும் வெற்றியை முன்னிறுத்தியே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவதாக விஜேயதாச ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## பொன்சேகா!

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இதை அவர் தனது எக்ஸ் கணக்கில் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

76 ஆண்டுகளாக, எங்களை திவாலான நிலைக்கு இட்டுச் சென்ற ஒரு திறமையற்ற அரசியல் குழுவால் நாங்கள் வழிநடத்தப்பட்டோம்.

இலங்கை வளர வேண்டுமானால், வருமானத்தை அதிகரிக்க நமது இயற்கை வளங்களைப் பயன்படுத்த வேண்டும். இலங்கையை முன்னேற்றுவதற்கு என்னுடன் இணையுமாறு ஒவ்வொரு இலங்கையரையும் நான் அழைக்கிறேன். எனவே, எதிர்காலத்தை கருத்திற் கொண்டு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)



# ரணிலுக்காக அணிதிரளும் மொட்டு எம்.பிக்கள்

(கொழும்பு)

**அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 48 அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கொழும்பில் இரண்டு இடங்களில் சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவை தெரிவிப்பது தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

இதன்படி அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 30 அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் அரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்கள் 18 பேர் தலவத்துகொடையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நியமித்தால் ஏற்படும் நிலைமைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாக கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் தருணத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமது ஆதரவை வழங்குவதற்கு இரு தரப்பினரின் இறுதி உடன்படிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம், அரசியல் அலுவலகம் ஸ்தாபித்தல், வாக்களிப்பு முகவர்கள் நியமனம், ஊடகப் பணிகள் போன்ற விடயங்களில் இரு தரப்பினரும் அதிக கவனம் செலுத்தி வருவதுடன் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களின் ஆதரவை வழங்குவது தொடர்பில் விரிவான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (நி-6)




# தமிழ் மக்களுக்காக ஒலித்த குரல் ஓய்ந்தது



(கொழும்பு)

சிரேஷ்ட அரசியல்வாதியும் நவ சம சமாஜ கட்சியின் தலைவருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன காலமானார்.

நீண்ட காலமாக சுகயீனமுற்றிருந்த நிலையில் நேற்று தனது 81 ஆவது வயதில் காலமாகினார்.

விக்ரமபாகு கருணாரட்ன தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் என்பதுடன் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக கொழும்பில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியான கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றுக் கொண்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு எதிராக குரல் கொடுத்த காரணத்தினால் அவர் தனது தொழிலை இழக்க நேரிட்டது.

அவரின் மறைவையொட்டி அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஓய்வூதியதாரர்களுக்கு விசேட கொடுப்பனவு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அரச சேவையின் ஓய்வூதியதாரர்களுக்கு விசேட மாதாந்த கொடுப்பனவாக 3,000 ரூபாய் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி சம்பள முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் இந்த விசேட மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கொடுப்பனவு மூலம் 7 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பலன் பெறுவார்கள் எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஒலிம்பிக் திருவிழா

# பாரிஸில் இன்று ஆரம்பம்

## 10,714 வீரர், வீராங்கனைகள் பங்கேற்பு




இந்த ஆண்டுக்கான 33ஆவது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடத்தப்படுகிறது. இந்த ஒலிம்பிக் திருவிழா இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டியில் 206 நாடுகளைச் சேர்ந்த 10,714 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். முதல் முறையில் வீரர்கள், வீராங்கனைகள் சம அளவில் கலந்து கொள்கிறார்கள். 32 விளையாட்டில் 46 பந்தயத்தில் 324 வகை பிரிவில் போட்டி நடைபெறவுள்ளது.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா சீனா இடையே கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா 592 பேரையும் சீனா 388 பேரையும் ஒலிம்பிக் போட்டிக்கு அனுப்பி வைத்துள்ளது. ஜப்பான், இங்கிலாந்து, தென் கொரியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள். பதக்கங்களை குவிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

கி.மு.776 ஆம் ஆண்டு முதலாவது ஒலிம்பிக் போட்டி கிரேக்க நாட்டில் உள்ள ஒலிம்பியா நகரில் நடந்தது. பின்னர் கிரேக்க மன்னர் தியோடோசியஸ் இந்த ஒலிம்பிக் போட்டிக்கு தடை விதித்தார்.

அதன்பின் கிரீஸ் தலைநகர் ஏதென்சில் முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டி 1896 ஆம் ஆண்டு நடந்தது. அதில் இருந்து 4 ஆண்டுக ளுக்கு ஒருமுறை கோடை கால ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

முதல் உலகப்போர் காரணமாக 1916 ஆம் ஆண்டும் 2 ஆவது உலகப் போர் காரணமாக 1940 மற்றும் 1944 ஆம் ஆண்டும் ஒலிம்பிக் போட்டி நடைபெற வில்லை.


கடைசியாக 2021 ஆம் ஆண்டு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டி நடந்தது. 2020 ஆம் ஆண்டு நடைபெற இருந்த போட்டி கொரோனா தொற்று காரணமாக ஒரு ஆண்டு தள்ளி வைக்கப்பட்டது. கொரோனா பாதிப்பால் ரசிகர்கள் யாருமே அனு மதிக்கப்படாமல் இந்த போட்டி நடத்தப்பட்டது.

ஒகஸ்ட் 11 ஆம் திகதி வரை இந்த போட்டிகள் நடக்கிறது. 3 ஆவது முறையாக பாரிஸில் ஒலிம்பிக் போட்டி நடக்கிறது.

அதேவேளை 100 ஆண்டுகளுக்கு பிறகு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதால் பிரான்ஸ் இந்த முறை அதிகமான பதக்கங்களை பெறும் ஆர்வத்தில் இருக்கிறது. (நி-6)

# பட்ஸ்மேன் தரவரிசையில்

## முதல் இடத்தை நெருங்கும் ரூட்



இங்கிலாந்து- வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்டில் ஜோ ரூட் அபாரமாக விளையாடி 2 ஆவது இன்னிங்சில் சதம் விளாசினார். மேலும், அந்த அணியின் மற்றொரு பட்ஸ்மேன் ஹாரி ப்ரூக்கும் சதம் அடித்தார்.

இதனால் இருவரும் ஐசிசி தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளனர். ஜோ ரூட் 12 ரேட்டிங் புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் நீடிக்கிறார். கேன் வில்லியம்சன் ஏழு புள்ளிகள் முன்னிலையுடன் முதல் இடத்தில் உள்ளார்.

தற்போது கேன் வில்லியம்சன் 859 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். ஜோ ரூட் 852 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார். ஹாரி ப்ரூக் 771 புள்ளிகளுடன் 4 இடங்கள் முன்னேறி 3 ஆவது இடத்திலும் பாபர் அசாம் ஒரு இடம் சரிந்து 4 ஆவது இடத்திலும் இந்தியாவின் ரோகித் சர்மா 7 ஆவது இடத்திலும், ஜெய்ஸ்வால் 8 ஆவது இடத்திலும், விராட் கோலி 10 ஆவது இடத்திலும் உள்ளனர். சுப்மன் கில் 20 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். (நி-6)

# மெஸ்ஸியை கௌரவித்த

# இண்டர் மியாமி கிளப்



அண்மையில் நடைபெற்ற கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் ஆர்ஜெண்டினா அணி 1-0 என்ற கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது.

இதன்மூலம் கால்பந்து வரலாற்றில் அதிக கோப்பைகள் (45) வென்ற வீரர் என்ற சாதனையை மெஸ்ஸி படைத்தார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் சிகாகோ பயர் அணியை 2 - 1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இன்டர் மியாமி க்ளப் வெற்றி பெற்றது.

இப்போட்டி நடைபெறுவதற்கு முன்பு கால்பந்து வரலாற்றில் அதிக கோப்பைகள் (45) வென்ற ஜாம்பவான் மெஸ்ஸியை இன்டர் மியாமி கிளப் கௌரவித்தது.

ஆண்டு வாரியாக வென்ற 45 கோப்பைகளின் படங்களை கைகளில் ஏந்தி அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இழப்பீடுகள் வேண்டாம் எமது பிள்ளைகளே வேண்டும்

## நீதிகோரி உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம்

(தருமபுரம்)
**கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்து இருந்தனர்.**



குறித்த போராட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம்பெற் றது.

சர்வதேச விசாரணையே தேவை, இழப்பீடுகள் வேண் டாம் எமக்கு பிள்ளைகள் வேண்டும் போன்ற போன்ற கோசங்களையும் பதாகைக ளையும் ஏந்தியவாறு கவன யீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

அதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கோரி யாழில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (நி-6-316)

# இசைநிகழ்வில் கத்தி வெட்டு இருவர் வைத்தியசாலையில்

(கரணவாய்)
வடமராட்சியில் உள்ள ஆல யம் ஒன்றில் இடம்பெற்ற இசை நிகழ்வில் கத்தி வெட்டிற்கு இலக்கான இருவர் பருத்தித் துறை ஆதாரவைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 12 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மகாத்மாவீதி, அல்வாயைச் சேர்ந்தவர்களான கிருபாகரன் நிதுசன் (வயது-29) மற்றும் ரஞ்சன் சுகந்தன் (வயது-29) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பருத்தித் துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (நி-6-60)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட நீதி வான் நீதிமன்றத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நீதிமன்ற வளாகத் தில் வைத்து மோட்டார் வாக னங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், கைத் தொலை பேசிகள், துவிச்சக் கரவண்டி கள் மற்றும் சவல்கள் என்பன ஏல விற்பனை செய்யப்படும் என கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட நீதி வான் நீதிமன்றத்தில் எதிர்வ ரும் 30 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நீதிமன்ற வளாகத் தில் வைத்து 32 டிப்பர் மணல், 2 டிப்பர் கிரவல், 4 டிப்பர் மணல் என்பன ஏல விற்பனை செய்யப் படும் என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# வட்டக்கச்சியில்

## கறுவா பயிர்ச்செய்கை

(தருமபுரம்)
வளம் தரும் வாசனைப் பயிரை வரவேற்போம் என்ற தொனிப்பொருளில் உலர் வல யத்தில் கறுவா பயிர்ச்செய்கை அறிமுக நிகழ்வும் பதப்படுத்தல் செயன்முறை விளக்க நிகழ் வும் கிளிநொச்சி வட்டக்கச்சி விவசாயத்திணைக்கள பயிற்சி நிலையத்தில் நேற்று நடை பெற்றது.

மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சு.ஜெகதீஸ்வரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளி நொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயபாஸ்கர், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் செ.சுகந்தினி, காலநிலைக்கு சீரமைவான விவசாயத்திட்டத்தின் பணிப் பாளர் பாபு, உத்தியோகத்தர் கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள்எனபலரும்கலந்து கொண்டனர். (நி-6-316-350)

# வரணிப் பொது நூலக பொதுக் கூட்டம்

(சாவகச்சேரி)
வரணிப் பொதுநூலகத்தின் நூலக அபிவிருத்தி ஆலோ சனைச் சபை பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற் பகல் 2.30 மணிக்கு வரணி பொது நூலக வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்போது புதிய யாப் பினை அங்கீகரித்தல் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவு ஆகிய செயற்பாடுகள் இடம்பெறவி ருப்பதாக நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபைச் செய லாளர் தெரியப்படுத்தியுள் ளார். (நி-6-30)

# நெடுவூர்த் திருவிழா


(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவின் நிலை பேறான அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு "மீண்டும் ஊருக்குப் போகலாம்" எனும் தொனிப் பொருளில் நெடுவூர்த் திருவிழா ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நெடுந்தீவில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த நிகழ்வு காலை 9 மணிமுதல் மாலை 10 மணிவரை இடம்பெறவுள் ளது.

இந் நிகழ்வில் கல்விசார், உள்ளூர் உற்பத்தி, விவசாயக் கண்காட்சி மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் எனப் பல நிகழ்வுகள் இடம்பெறவுள் ளன.

தொடர்ந்து ஆறு நாட்கள் குறித்த நிகழ்வு நடைபெறவுள் ளது. (நி-6)

# வெடிபொருட்கள் அகற்றிய பகுதிகளை பார்வையிட்ட ஜப்பான் தூதரக அதிகாரிகள்



(கண்டாவளை)
கிளிநொச்சி முகமாலை மற் றும் யாழ்.கேரதீவு ஆகிய பகுதி களில் ஜப்பான் நாட்டின் நிதி யுதவியுடன் நிலக்கண்ணி வெடியகற்றப்பட்ட பகுதிகளை ஜப்பானிய தூதர அதிகாரிகள் நேற்று சென்று பார்வையிட்டு பொது மக்களுடன் கலந்துரை யாடியுள்ளனர்.

கிளிநொச்சிபச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை மேம்பெடு கேணிபகுதியில் ஜப்பான் நாட் டின் நிதி உதவியுடன் வெடி பொருள் அகற்றும் பணியினை மேற்கொண்டு வரும் மனிதா பிமான கண்ணிவெடியகற்றும் நிறுவனமான டாஸ் நிறுவனத் தினால் வெடி பொருட்கள் அகற் றப்பட்டு நிறைவுறுத்தப்பட்ட பகுதிகளை நேரடியாக சென்று பார்வையிட்டு அந்த காணி உரிமையாளர்களோடும் கலந் துரையாடியிருந்தனர்

கேரதீவு பகுதிக்குச் சென்ற மேற்படி குழுவினர் அப்பகுதி யில் கடற்கரையோரங்களில் கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் கடற் கரையோரங்களில் அடையா ளம் காணப்பட்டு வெடிபொருட் கள் அகற்றப்பட்ட பகுதிகளை சென்று பார்வையிட்டதுடன் தற்போது அப்பகுதிகளில் கடற் றொழிலில் ஈடுபடுகின்ற கடற் றொழிலாளர்கள் மற்றும் அந்த பிரதேச மக்களுடனும் கலந்து ரையாடினர்.

ஜப்பான் நாட்டின் உயர் அதிகாரிகாரியான அடிமட்ட மனித பாதுகாப்பு திட்டங்க ளுக்கு உதவி வழங்குதல் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் ஆலோசகர் கடோ அகிகோ மற்றும் ஜப்பான் நாட் டின் இலங்கைக்கான உயர்ஸ் தானிக செயலகத்தின் அதிகாரி ஆகியோரே குறித்த பகுதிக ளுக்கு சென்று பார்வையிட்டு இருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-6-35-316)


# பேருந்தில் 1 1/2 கிலோ வெடிமருந்து மீட்பு

## ஒருவர் கைது

(சாவகச்சேரி)
பேருந்தில் மிதிவெடி மருந்துடன் வந்த நபர் ஒருவரை நேற்று வியாழக் கிழமை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ள னர்.

ஆழியவளையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்தில் வெடிமருந்துடன் ஒருவர் பயணிப்பதாக சாவ கச்சேரி இராணுவப் புலனாய் வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் ஊடாக மேற்படி கைது நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டுள் ளது.

இதன்போது கைதான நபரிடம் இருந்து சுமார் ஒன் றரை கிலோ வெடிமருந்து




கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

கைதான நபரை நீதி மன்றில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலி ஸார் முன்னெடுத்து வருகின் றனர். (நி-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாலையில் மக்கள் எதிர்ப்பால் காணி அளவீடு இடைநிறுத்தம்

**(மன்னார்)**
**பேசாலை பகுதியில் காற்றாலை அமைப்பதற்காக ஆலயம் மற்றும் பொதுமக்களின் காணிகளை நில அளவீடு செய்வதற்கு நேற்றுக்காலை திணைக்கள அதிகாரிகள் குறித்த பகுதிக்கு வந்ததையடுத்து அப்பகுதி மக்களின் எதிர்ப்பினை அடுத்து அளவீடு இடைநிறுத்தப்பட்டது.**



பேசாலை பகுதியில் அமைந்துள்ள புனித வெற்றிநாயகி ஆலயத்துக்கும் பொது மக்களுக்கும் சொந்தமான காணிகளை மின் காற்றாலை அமைக்கும் நோக்குடன் நில அளவீடு செய்வதற்கு பொலிஸ் பாதுகாப்புடன் அதிகாரிகள் வர உள்ளதாக தகவல் கிடைத்த நிலையில் பேசாலையில் நேற்று அனைத்துக் கடைகளும் மூடப்பட்டு பொது மக்கள் நில அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்த இடத்தில் ஒன்று கூடியிருந்தனர்.

நில அளவை செய்ய வந்தவர்கள் மக்கள் எதிர்ப்பு காணப்பட்டமையால் குறிப்பிட்ட இடங்களை நில அளவை செய்து திரும்பிச் சென்றனர்.

தொடர்ச்சியாக குறித்த பிரதேசத்தில் மக்களின் எதிர்ப்புகளையும் மீறி நில அளவீடு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# திருடிய பொருட்களுடன் ரயிலில் வந்த மூவர்

## நாவற்குழியில் கைது


(சாவகச்சேரி)

அனுராதபுரம் பகுதியில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் திருடிய இலத்திரனியல் பொருட்களுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

அனுராதபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இருந்து திருடப் பட்ட கணணி உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்களை புகையிரதத்தில் எடுத்து வந்த மூவரை நாவற்குழி புகையிரத நிலையத்தில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது நாவற்குழி மற்றும் சண்டிலிப்பாய் பகுதிகளைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6-30)



சிங்கர் நிறுவனத்தினால் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான நான்கு வளிப்பதனாக்கிகள் (ஏ.சி) கையளிக்கப்பட்டது.யாழ். மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதியில் நேற்று குறித்த பொருட்கள் மருத்துவ பீட நிர்வாகத்தினரிடம் சிங்கர் நிறுவனத்தின் பணிப்பாளர் பிரேஜித் மீகொடவால் வழங்கி வைக்கப்பட்டது. (படம்-சிவசாந்தன்)



வட்டுக்கோட்டை சிவபூமி தேவார மடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.

# சைவ சித்தாந்த பண்டிதர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ சித்தார்ந்த பிரவேச பண்டிதர், சைவ சித்தார்ந்த பால பண்டிதர், சைவ சித்தார்ந்த பண்டிதர் பரீட்சைகள் எதிர் வரும் புரட்டாதி மாதம் நடைபெற வுள்ளது.

இதனையொட்டி சூம் செயலி மூலம் விரிவுரை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது.

இலங்கை முழுவதிலிருந்தும் மாணவர்கள் நேரடியாக வரவழைக்கப்பட்டு யாழ். நீராவியடி சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நாளை, நாளை மறுதினம் நடைபெறும். விரிவுரைகளோடு மாணவர்களுக்குரிய ஒப்படைகள், முன் வைப்புக்களும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடை பெற வுள்ளதென பரீட்சை இணைப்பாளர் காசிநாதன் தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களைப்பெற 077 349 2306 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (நி-6)

# பரிசளிப்பு விழாவும் 150 ஆவது ஆண்டு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தவத்திரு யோக சுவாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் க.க. தவகீஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஜ.ராஜசீலன், கௌரவ விருந்தினர்களாக பாடசாலை பழைய மாணவி திருமதி.க. உமாரஞ்சினி (லண்டன்) மற்றும் பாடசாலை பழைய மாணவன் செ. செல்வஹஜீவன் (எஸ். எல்.பி.போன் சோப் உரிமையாளர்) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் 2 மணிக்கு குறித்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பண[illegible] கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி-6)



செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் பாடசாலை மாணவர்களிடையே நடத்தி வரும். விவாத நிகழ்ச்சியின் சிறப்பு நிகழ்வு அண்மையில் யாழ். கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. இதில் தென்னிந்திய பட்டிமன்ற பேச்சாளர்களான எஸ்.ராஜா, திருமதி.பாரதி பாஸ்கர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (படம்-சிவசாந்தன் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி கரைச்சி கோட்ட இலக்கிய நாடக விழா நேற்று முன்தினம் கனகபுரம் மகா வித்தியாலயத்தில் கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் தலைமையில் இடம் பெற்றது. 1 ஆம் இடத்தினை கிளிநொச்சி மத்திய கல்லூரியும் 2 ஆம் இடத்தினை செல்வாநகர் அ.த.க.பாடசாலையும் 3 ஆம் இடத்தினை அக்கராயன் மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன. (படம்:கிருஷ்ணகுமார்)


# வேலையாட்கள் தேவை

யாழ்.பிரபல சைவ உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிட வசதி,கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

- உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
- பிரதான சமையலாளர்
- (HRM) உதவி முகாமையாளர்
- சமையலறை வேலையாட்கள்
- ரீமேக்கர்
- சாரதி (சிறிய ரக வாகனம்) (ஆட்டோ) 40 வயதிற்குமேல்
- அலுவலக உதவியாளர் (பெண்)
- களஞ்சிய காப்பாளர்
- சுத்திகரிப்பாளர்
- இடியப்பம் போடுபவர்கள்
- மரக்கறி வெட்டுபவர்
- றொட்டிவேலையாட்கள்


(1552)

தொடர்பு- 077 791 7753
021 222 2373
021 221 6633

50/6 வைமன் றோட்,
யாழ்ப்பாணம்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின்
தலைவர்

**திரு.கந்தசாமி இராஜசந்திரன்**

அவர்கள்
வட மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி
உயர் திரு. D.S சூசைதாஸ்
முன்னிலையில் 2024.07.03 அன்று
அகில இலங்கை சமாதான நீதவானாக
உறுதிமொழி எடுத்துள்ளார்.
இவரது சேவை மென்மேலும் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்- பணிப்பாளர் சபை, பணியாளர்கள்
காரைநகர் ப.நோ.கூ. சங்கம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



# யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்


யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 11.08.2024 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் செல்வா கலை யரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே சகல பெற்றோரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(சி-857)

திருமதி. இ. முத்துக்குமாரன் (அதிபர்)
தலைவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.








# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1981-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா:15 1/4<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்:Bsc, Teacher<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி, Doctor, Engineer, Lecturer<br>தொ.இ: B/14698 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம் :அவிட்டம்<br>9 இல் சூரிசெவ்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்:BA, IT Lecturer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14058 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம் :5'9"<br>தகைமை/தொழில்:A/L, Super Market(London)<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14699 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>1 இல் செவ்<br>கி.பா:62<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்:Bsc(Hons) in IT<br>எதிர்பார்ப்பு: IT Field<br>தொ.இ: G/14060 |
| பிறப்பு:1986-இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா:33 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:Higher Diploma in Civil Engineer,Land Officer<br>எதிர்பார்ப் பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/7838 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>12 இல் செவ்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:Bsc, Electrical Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, IT,Bank Manager<br>தொ.இ: G/14062 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கல்யாண செலவு மட்டுமல்ல பரிசுகளும் கோடியில் தான்!



(டில்லி)

ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்ச்சண்ட் தம்பதிக்கு கொடுக்கப்பட்ட திருமணப் பரிசுகள் தொடர்பான சில தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

உலகப்பெரும் பணக்காரர் களில் ஒருவரான அம்பானி, சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தனது மகன் ஆனந்த் அம்பானியின் திருமணத்தை நடத்தி முடித்துள்ளார். இவர்களது திருமணம் மற்றும் ரிசப்ஷனுக்கு உலகம் முழுவதிலும் இருந்து ஆயிரக் கணக்கானவர்கள் பங்கேற்றாலும் முக்கிய பிரபலங்கள் தவறாமல் இடம் பெற்றிருந்தனர்.

திருமண பரிசாக முகேஷ் அம்பானி மற்றும் நீதா அம்பானி சார்பாக விலையுயர்ந்த கார், நூறு கோடி ரூபாய் வைரம் மற்றும் முத்துக்கள் அடங்கிய நகைகள் பரிசளிக்கப்பட்டது. அத்தோடு.Palm Jumeirah வில் சுமார் 3 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் சொகுசு மாளிகையை பரிசாக வழங்கியுள்ளனர் முகேஷ் அம்பானி -நீதா தம்பதி.

இதன் மதிப்பு சுமார் 640 கோடி ரூபாய் என்கிறது தரவுகள். இந்த சொகுசு மாளிகையில் 10 படுக்கையறைகள் மற்றும் ஒரு தனி கடற்கரையும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாது திருமணத்தில் பங்கேற்ற பல முக்கிய பிரபலங்கள் ஆடம்பர பரிசுகளை வழங்கியுள்ளனர். திருமண விழாவில் பங்கேற்ற பாலிவுட் நடிகர் ஷாருக்கான் சுமார் 40 கோடி ரூபாய் மதிப்பில் ஃபிரான்ஸில் உள்ள பிளாட்டை பரிசாக வழங்கியுள்ளனர்.

அதேபோல் 16 கோடி ரூபாய் மதிப்பிலான புதுவகை ஸ்போர்ட்ஸ் பைக்கை பரிசாக வழங்கியுள்ளார் சல்மான் கான். தொடர்ந்து 20 கோடி ரூபாய் மதிப்பிலான ரோல்ஸ் ராயல்ஸை ரன்வீர் சிங்- தீபிகா படுகோன் தம்பதி பரிசாக வழங்கியுள்ளனர்.

இதேபோல், ரன்பீர் கபூர்-ஆலியா பட் தம்பதியினர் 9 கோடி மதிப்பிலான Merce des car ஐ பரிசாக வழங்கி யுள்ளனர். அக்ஷய் குமார் 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கப் பேனாவை வழங்கியுள்ளார். நடிகர் – நடிகைகள் தான் பரிசளித்தார்களா என்றால் இல்லை.

உலகப்பணக்காரர்கள் தொடங்கி பேஸ்புக், கூகுள் நிறுவனங்களின் தலைமை நிலைய அதிகாரிகள் வரை முக்கிய பிரபலங்கள் பரிசுகளை வாரி வழங்கியுள்ளனர்.

ஃபேஸ்புக் தலைமை நிலைய அதிகாரி மார்க் செக்கர்பர்க் 300 கோடி ரூபாய் மதிப்பிலான ஜெட் விமானத்தை வழங்கியுள்ளார். 180 கோடியில் தனியார் சொகுசு கப்பலை பில்கேட்ஸூம், 100 கோடி ரூபாயில் ஹெலி கொப்டரை சுந்தர் பிச்சையும் பரிசாக வழங்கியுள்ளனர். இத்தோடு புகழ்பெற்ற அமெரிக்க மல்யுத்த வீரர் ஜான் சீனா 3 கோடி ரூபாய் மதிப்பிலான Lamborghini காரை பரிசளித்துள்ளார். (நி-6)

## ஷாருகானின் உருவம் பதித்த தங்க நாணயம் பாரிஸில் வெளியீடு






(பாரிஸ்)

பொலிவூட் சூப்பர் ஸ்டார் ஷாருகானின் உருவம் பதித்த சிறப்பு தங்க நாணயத்தை பாரிஸில் உள்ள Grevin அருங்காட்சியகம் வெளியிட்டுள்ளது.

இந்தப் பெருமையை பெறும் முதல் இந்திய நடிகர் என்ற சாதனையை ஷாருகான் படைத்துள்ளார்.

ஷாருக்கான் நடிப்பில் கடந்த வருடம் வெளியான பதான் மற்றும் ஜவான் ஆகிய திரைப்படங்கள் பெரியளவிலான வசூலை கடந்து சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

## எரி பொருளுடன் மூழ்கிய கப்பல் பிலிப்பைன்ஸ் அருகே சம்பவம்



(மணிலா)

1.5 மில்லியன் லீற்றர் தொழிற்சாலை எரிபொருளை ஏற்றிச் சென்ற கப்பல் பிலிப்பைன்ஸ்அருகே கடலில் மூழ்கியுள்ளது.

இதனால், சுற்றியுள்ள கடற்பகுதியில் பாரிய எண்ணெய் படலங்கள் காணப்படுவதாக சர்வுதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்த கப்பலில் இருந்த 17 பணியாளர்களில் 16 பேரை நிவாரணக் குழுவினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.காணாமல் போனவரை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (நி-6)

## நியூயோர்க் விமான நிலையத்தில் தீ விபத்து

### 9 பேர் காயம்



(வோஷிங்டன்)

அமெரிக்கா நியூயோர்க்கில் உள்ள ஜான் எப் கென்னடி விமான நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது. விமான நிலையத்தின் டெர்மினல் 8 இல் உள்ள எஸ்கலேட்டரில் தீப்பிடித்தது. இதனால் பயணிகள் அலறியடித்து ஓடினர்.

உடனே தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்த தீ விபத்தில் 9 பேர் காயம் அடைந்தனர். 900 இற்கும் மேற்பட்ட பயணிகள் வெளியேற்றப்பட்டனர்.இந்த சம்பவத்தால் 3 விமானங்களும் ரத்து செய்யப்பட்டன. தீ விபத்து தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. (நி-6)

## அமெரிக்க

## உரு

## சீற்றத்

(வோஷிங்டன்) —
அமெரிக்க காங்
உரையாற்றியுள்ள அ
இடம்பெற்றுள்ளன.



ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கக் கொடியையும்

## பிலிப்பைன்ஸ்

## புரட்டிப் போ

### 14 பேர் உயி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணி லாவில் வீசிய 'கேய்மி' சூறாவளி அந்நகரையே தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது.

கனமழையைத் தொடர்ந்து கரைபுரண்டு ஓடும் வெள்ளத்தில் அந்நகரம் தள்ளாடுகிறது. சாலைகள் மூழ்கிக் கிடக்கின்றன. பாடசாலைகள், மருத்துவமனைகளில் மார்பு அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் ஆயிரக்கணக்கானவர்கள் மாற்று இடங்களைத் தேடி ஓடியிருக்கின்றனர்.

பெருநகரமான மணிலாவில் சுமார் 13 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். மணிலா 16 நகரங்களை உள்ளடக்கியதாகும்.இந்த நிலையில் ஆறுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ங்க காங்கிரஸில் உரையாற்றிய நெதன்யாகு

# ருவ பொம்மை எரித்து

# த்தை வெளிப்படுத்திய மக்கள்!

ாங்கிரஸில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ா அதேவேளை வோஷிங்டன் டிசியில் கடும் ஆர்ப்பாட்டங்கள் ன.







பெஞ்சமின் நெதன்யாகுவின் உருவப் பொம்மையையும் எரித்து தங்கள் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

'ஹமாஸ் கமிங்' என்ற வாசகத்தை எழுதிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கொலம்பசின் சிலைமீது ஏறியுள்ளனர்.

வோஷிங்டனின் பிரதான புகையிரத நிலையத்தின் முன்னால் பாலஸ்தீன கொடிகள் ஏற்றப்பட்டதாகவும் நெதன்யாகுவின் கொடும்பாவி எரிக்கப்பட்டதாகவும் சிஎன்என் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 9 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)

## ஸ் தலைநகரை தலைகீழாக போட்ட சூறாவளி

### யிரிழப்பு



நீர்மட்டம் அபாயகரமான அளவுக்கு அதிகரித்துள்ளதால் ஆறுகளைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். 'பிலிப்பைன்ஸ் டெய்லி இன்கியூரர்' பதிவிட்ட காணொளி ஒன்றில் மணிலாவின் தெற்கில் உள்ள மேகாயன் சாலையில் ஒரு சிறிய கார் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

இந்நிலையில் மணிலாவுக்குத் தெற்கே பட்டான்காஸ் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் கர்ப்பிணி பெண், மூன்று குழந்தைகள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து கனமழையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

மெட்ரோ மணிலாவின் மலபோன் நகர மேயரான ஜீனி சாண்டோவல், நகரத்தின் ஏறக்குறைய அனைத்துப் பகுதிகளும் வெள்ளத்தில் மிதப்பதாகக் தெரிவித்தார். வடக்கு பிலிப்பைன்ஸ் பகுதிகளைத் தாக்கிய 'கேய்மி' சூறாவளி தைவானை நோக்கி நகர்ந்து செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# காசா ஆட்சி தொடர்பில்

## பாலஸ்தீன அமைப்புகள் ஒப்பந்தம்



(பீஜிங்)

பாலஸ்தீனத்தின் தேசிய ஒற்றுமைக்காக இணைந்து செயற்படுவது தொடர்பில் ஃபத்தா உட்பட ஏனைய பாலஸ்தீன அமைப்புகளுடன் சீனாவில் தான் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக ஹமாஸ் இயக்கம் நேற்று முன்தினம் அறிவித்தது.

பீஜிங்கில் கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம், யுத்தம் முடிவடைந்த பின்னர் காசாவை எவ்வாறு ஆட்சி செய்வது என்பது தொடர்பானது என சீனா தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்காக ஹமாஸின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான மூசா அபு மர்சூக், பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸின் ஃபத்தா கட்சியின் தலைவர்களில் ஒருவரான மஹ்மூத் அல் அலோல் மற்றும் மேலும் 12 பாலஸ்தீன குழுக்களின் பிரதிநிதிகள் சீனாவுக்குச் சென்றிருந்தனர்.

இந்த ஒப்பந்தம் குறித்து சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யீ கூறுகையில், காசா யுத்தத்தின் பின்னர் இடைக்கால தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு இக் குழுக்கள் இணைங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபரில் ஆரம்பமான இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தம் 9 மாதங்களை கடந்துள்ள நிலையில் இந்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்திய 93 வாகனங்கள் கறுப்புப்பட்டியலில்

(கொழும்பு)

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் புகையுடன் பயணித்த 93 வாகனங்கள் இந்த வருடத்தில் கருப்புப்பட்டியலில் இடப்பட்டுள்ளதாக வாகன உமிழ்வு சோதனை அறக்கட்டளை நிதியம் தெரிவித்துள்ளது.

பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய குறித்த வாகனங்கள் கருப்புப்பட்டியலில் இடப்பட்டதாக அதன் பணிப்பாளர் தசன் கமகே தெரிவித்துள்ளார்.

சில வாகனங்கள் தீங்கு விளைவிக்கும் வகையில் புகையை வெளியேற்றினால் 070 3500 525 என்ற வட்ஸ்அப் எண்ணுக்கு புகைப் படம் அல்லது வீடியோக்களை அனுப்புமாறு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக் களம், பொதுமக்களிடம் கோரியிருந்தது.

அந்த வாகன உரிமையாளர்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகங்களுக்கு அழைத்து அறுவுறுத்தப்படும்.

அதனையும் பொருட்படுத்தாவிடின் கறுப்புப்பட்டியலில் இடப்படும்.

கடந்த ஆண்டு 1800 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. பின்னர் அவற்றில் சுமார் 200 வாகனங்கள் கருப்புப் பட்டியலில் இடப்பட்டது

இந்த வருடத்தில் இது வரை 517 முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் அவற்றில் 93 வாகனங்கள் கருப்புப் பட்டியலில் இடப்பட்டது என அவர் தெரிவித்தார் (நி-6)

# மனநல நோய்க்கான அறிகுறிகளுடன் வைத்தியசாலைக்கு வருவோர் அதிகரிப்பு

(பதுளை)

மனநல நோய்க்குரிய அறிகுறிகளுடன் பதுளை போதனா வைத்தியசாலைக்கு வருகை தரும் சிறுவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பதுளை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மனநல நோய்க்குரிய அறிகுறிகளுடன் நாளாந்தம் 4 முதல் 5 சிறுவர்களும், 3 முதல் 4 இளைஞர், யுவதிகளும் வைத்தியசாலைக்கு வருகை தருகின்றனர். மயக்கம், வேகமாகச் சுவாசித்தல், நெஞ்சு வலி, கைகால்மரத்துப் போதல், கை, கால் விரல்கள் இழுத்தல், சுவாசிப்பதற்குச் சிரமம்ஏற்படல், அதிகமாக வியர்வை வெளியேறுதல் மற்றும் தூக்கமின்மை உள்ளிட்டவை மனநல நோய்க்குரிய அறிகுறிகளாகும்.

இது பெரும்பாலும் 'Panic Attack' என அழைக்கப்படுகின்றது. அதிகளவான அச்சம், வாழ்க்கை தொடர்பான அச்சம், சமாளிக்க முடியாத சூழ்நிலைகள் தொடர்பான அச்சம் காரணமாக இந்த 'Panic Attack' ஏற்படலாம். எனவே, இத்தகைய நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 100-180 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 250 | 280 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 400-550 | 800 |
| தக்காளி | 350 | 400 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 120-150 | 200 |
| கோவா | 300 | 360 | 250 | 400 |
| கரட் | 350 | 500 | 350 | 520 |
| பூசணி | 200 | 240 | 160 | 250 |
| புடோல் | 150 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 240 | 160-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 150-350 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 240 | 200 |
| பாகற்காய் | 600 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 250 | 260 | 320 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 220 | 200-300 | 200 |
| லீக்ஸ் | 450 | 500 | 400 | 600 |
| பீற்றூட் | 400 | 360 | 450 | 450 |
| கறிமிளகாய் | 800 | 900 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 100-160 | 300 |
| போஞ்சி | 600 | 600 | 400 | 1000 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 600 | 700 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | -- | 600 |
| வெங்காயப்பூ | 200 | 300 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 40 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 |

## இன்று ஒரு தகவல் 194



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# அன்பு

அன்பாக இருக்க வேண்டும் என்று அநேக பெரியவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நாங்களும் அதைக் கேட்டுவிட்டு அன்பு காட்டுவதற்கு தயாராகத் தான் இருக்கின்றோம். அதை வாங்குவதற்கு தான் ஆளைக்காணோம். இருந்தாலும் அன்பிலே எத்தினையோ வகை உண்டு. அதைச் சரியாகப் புரிந்து கொண்டு அதன்பின் அன்பு காட்ட ஆரம்பிக்க வேண்டும். வகையைப் புரிந்து கொள்ளாமல் அன்பு காட்டினால் வம்பிலே மாட்டிக் கொள்ள வேண்டியது தான்.

அன்பு என்றால் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள். அதிலே எவ்வளவு விதம் தெரியுமா? இரக்கம், கருணை, காருண்யம், பந்துத்துவம், பட்சம், பாசம், நேசம், விசுவாசம், அபிமானம், காதல், பக்தி இப்படி பலவிதமாக அதைப்பற்றி சொல்கின்றார்கள் பெரியவர்கள். இந்த வார்த்தைகளெல்லாம் நாம் கேள்விப்பட்டது தான். இருந்தாலும் அதற்குள்ளே என்ன வித்தியாசம் என்று கேட்டால் சரியாக சொல்லத் தெரியாது. அதனாலே இந்த வார்த்தைகளுக்கெல்லாம் பெரியவர்கள் என்ன விளக்கம் கொடுக்கின்றார்கள் என்று இப்போது பார்க்கலாம்.

எளியவர்கள் மேலே செலுத்துகின்ற அன்பு இருக்கின்றது பாருங்கள். அதற்கு இரக்கம் என்று பெயர். அறிவு பலம், சரீர பலம் இது இரண்டும் இல்லாதவர்கள் மேலே அதாவது வலிமையற்றவர்கள் மேலே செலுத்துகின்ற அன்பு இருக்கின்றது பாருங்கள் அது தான் கருணை.

எறும்பிலே இருந்து யானை வரைக்கும் சகல ஜீவராசிகள் மேலேயும் காட்டுகின்ற அன்பிற்கு காருண்யம் என்று பெயர். ஜீவகாருண்யம், சிபிச்சக்கரவர்த்தி காட்டிய அன்பு இந்த ரகம். உறவினர்கள், சொந்தக்காரர்கள் வசதியாக இருந்தாலும் வறுமையிலே இருந்தாலும் வித்தியாசம் இல்லாமல் காட்டுகின்ற அன்பு இருக்கின்றது பாருங்கள் அதற்கு பெயர் பந்துத்துவம். ஒரு எஜமானன் வேலையாட்களிடம் காட்டுகின்ற அன்பு இருக்கின்றது பாருங்கள் அதற்கு பெயர் தான் பட்சம். அவனும் தன்னை மாதிரி மனிதன் தான் என்கின்ற நினைப்பு வேண்டும்.

ஒரு தாய் தன் குழந்தை மேலே, குழந்தை தன் தாய் மேலே செலுத்துகின்ற அன்பிற்கு பாசம் என்று பெயர். (ஈருடல் ஓர் உயிர் என்று நினைக்கின்றது இது) ராமரும் கௌசலையும் அதற்கு உதாரணம். தம்மை ஒத்த நண்பர்களிடம் செலுத்துகின்ற அன்பிற்கு நேசம் என்று பெயர். வயது, செல்வம், அந்தஸ்து இந்த வித்தியாசம் எல்லாம் பார்க்காமல் அவர்கள் சுக, துக்கத்திலே சம பங்கு எடுப்பது தான் இது. கிருஷ்ணன் குசேலரிடம் காட்டியது இந்த ரகம். வேலை செய்கின்றவன் முதலாளியிடம் காட்டுகின்ற அன்பிற்கு விசுவாசம் என்று பெயர்.

தேசத்தின் மேலேயும் தாய்மொழியிலும் செலுத்துகின்ற அன்பிற்கு அபிமானம் என்று பெயர். தேசாபிமானம் என்று சொல்கின்றோமே இது தான். ஒரு கணவன் மனைவி மேலே காட்டுகின்ற அன்பிற்கு காதல் என்று பெயர். கடவுள் பேரிலே செலுத்துகின்ற அன்பிற்கு பக்தி என்று பெயர். இப்படி அன்பிலே பல ரகம் இருக்கின்றபோது அதிலே உள்ள வித்தியாசம் தெரியாமல் இடம் மாற்றி அன்பு செலுத்தினால் இடஞ்சல் தான்.

சரி இந்த அன்பைப்பற்றி விஞ்ஞானம் என்ன சொல்கின்றது தெரியுமா? இதயத்தை பாதுகாப்பதற்கு முக்கியமாக தேவைப்படுகின்ற ஒன்று இந்த அன்பு தான் என்று சொல்லுகின்றது. நெதர்லாந்து விஞ்ஞானிகள் இதை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ளார்கள். கொஞ்ச முயல் குட்டிகளை இரண்டு பிரிவாகப் பிரித்தார்கள். இரண்டு பிரிவுக்கு கொழுப்பு அதிகமாக உள்ள ஆகாரத்தைக் கொடுத்தார்கள். ஆனால் ஒரு குழுவிற்கு வெறுமனே ஆகாரத்தைக் கொடுத்ததோடு சரி. இன்னொரு குழு முயல்களுக்கு ஆகாரம் கொடுத்ததோடு நிறுத்தவில்லை.

அதற்கு முன்னாலே கூண்டுகளைத் திறந்துவிட்டு முயல்களை கொஞ்ச நேரம் கொஞ்சி விட்டு அதன்பின் உணவு கொடுத்தாராம் ஆராய்ச்சியாளர். இந்தக் குழுவிற்கு இதயபாதிப்பு 60 சதவீதம் குறைவாக இருந்ததாம். சில நோயாளிகளுக்கு இதய நோய் வந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு குணமாகின்ற சக்தி அதிகமாக இருக்கின்றது. இது எப்படி என்று ஆராய்ந்து பார்த்தார்கள்.

அவர்கள் எல்லாம் மனைவி தன் மேலே மிகவும் அன்பாக இருக்கின்றதாக நினைக்கின்றவர்களாக இருந்தார்களாம். இதயநோயாளிகள் பல பேரை சந்தித்து இதய நோய் ஏற்பட காரணம் என்ன என்று கேட்டிருந்தார்கள். அவர்கள் சொன்ன காரணம் எல்லாம் உணவு சம்பந்தமாக இல்லையாம். மனைவி அன்பாக இல்லை. இப்படிப்பட்ட காரணங்களைத் தான் சொல்கின்றார்களாம்.

அதனாலே இதயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் அடுத்தவர்கள் அன்பாக இருக்கின்ற மாதிரி பார்த்துக்கொள்ளுங்கள். அது தான் முக்கியம். ஒருவர் முகம் முழுவதும் பிளாஸ்ரர் போட்டுக்கொண்டு வந்தார் மிகவும் கோபமாக. என்ன ஆகியது என்று விசாரித்தேன். எல்லாம் உங்களாலே தான் சார் என்றார். விபரமாக சொல்லுங்கள் என்றேன்.

உங்கள் தகவலைக் கேட்டுவிட்டு ஒரு பூனைக்குட்டியைக் கையிலே எடுத்தேன் அன்பாக அதைத் தடவிக் கொடுப்பதற்கு. ஆனால் அது முந்திக்கொண்டது. அது என் முகத்தைத் தடவிக்கொடுத்து விட்டது. முகம் முழுவதும் நகக்கீறல் அது தான் இப்படி என்றார். அன்பிலே அறிவு சேராததனாலே வந்த கோளாறு இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவியை கோரும் நாமல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக்கு அப்பாற்பட்ட வேட்பாளருக்கு ஆதரவளித்தால் அடுத்த அரசாங்கத்தின் பிரதமர் பதவியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு வழங்கப்பட வேண்டும் என அதன் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங் கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லமான விஜேராம மாவத்தையில் நேற்று முன் தினம் சந்தித்து எதிர்வரும் அரசியல் நிலைமைகள் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடினர். கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் மொட்டு கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் குழுவொன்று இந்த சந்திப்பில் இணைந்திருந்தது. (நி-6)


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் உள்ள Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள் தேவை

- சமையல் உதவியாளர் Cooking helper - Male/ Female
- Room boy - Male

076 400 1234/ 071 190 9496

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ள பிரபல கட்டிட நிறுவனம் ஒன்றிற்கு

- மேசன் (Meason)
- உதவியாளர் (Labour)
- பெயின்ரர் (Painter) தேவை

தொடர்புகளுக்கு-076 200 4827/ 077 558 8835

## லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.


இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை. (91)

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய 61 ஆவது சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில்

எமது பாடசாலையின் ஆசிரியர்

**திரு.கந்தசாமி கைலநாதன்**

அவர்கள்

சைவப்புலவர் பட்டத்தை பெற்றமைக்காக அவரை பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம் (1555)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை.


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை:** மானிப்பாய் கிராம உப அலுவலகம்
**விண்ணப்பதாரரின் பெயர்:** பொது முகாமையாளர், மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.
**முகவரி** : ஆதன இல: 60A, வீதி: இணுவில், வட்டாரம்: 03

வட்டாரம் 03. இணுவில் வீதி, ஆதன இலக்கம் 60A இல் அமைந்துள்ள, வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு கணக்கன் தோட்டம் எனும் பெயருள்ள 08.50 குளி விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்குரியது என பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் அவர்களால் எழுதப்பட்ட 2424 ஆம் இலக்க 2023.05.10 ஆம் திகதிய ஆட்சி பிரகடன உறுதி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் T.பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட **1870/2023** ஆம் இலக்க 2023.08.16 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு: 00. குளி: 08.50 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு,

வடக்கு- மானிப்பாய் இணுவில் வீதி
கிழக்கு- கையிலாயபிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
தெற்கு- வாய்க்கால்
மேற்கு - வீதி

மேற்குறித்த ஆதனத்தை மானிப்பாய் பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.** (1553)

## இராசிபலன்

26.07.2024
ஆனி 10, வெள்ளிக்கிழமை,
பஞ்சமி காலை 6.18 மணிவரை
சஷ்டி பின்னிரவு 3.52 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 7.08 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சந்திராஷ்டமம் - பூசம், ஆயிலியம்

**வளவன்**

**மேஷம்** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைனக்கென நினைக்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள்.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

**மகரம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரதங்களில் நம்பிக்கை கூடும், பணவரவு திருப்தி தரும்.

**மீனம்** எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள்.

**அகந்தை என்பது அத்திவாரம் இல்லாத கட்டடம் போன்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

542





"கோடிக்கரைக் காடு தாண்டிய பிறகு இறங்கிச் செல்லலாமே? என் குதிரையையும் அங்கேதான் நிறுத்தி வைத்திருக்கிறேன். அடையாளம் நினைவிருக்கிறதல்லவா?" என்றான் சேந்தன் அமுதன்.

"வேண்டாம். நான் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன். குழகர் கோயில் பிராகாரதில் சற்று நேரம் படுத்துத் தூங்கிவிட்டுப் பொழுது விடிவதற்குள் எழுந்து புறப்படுகிறேன். இல்லாவிடில் நாளைக்குப் பிரயாணம் செய்ய முடியாது! வழியில் எவ்வளவு தடங்கல்களோ!" என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலி அத்தனை நேரமும் தன் மடியில் பத்திரப் படுத்தி வைத்திருந்த பொட்டலத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். "இந்தா! குழகர் கோயில் பிரசாதம். இதை சாப்பிட்டு விட்டுத் தூங்கு!" என்றாள்.

"நீங்களும் ஒன்றும் சாப்பிடவில்லையே, உங்களுக்கு வேண்டாமா?"

"கோடிக்கரையிலிருந்து காத தூரம் கால்வாயில் போய் விட்டால் எத்தனையோ கிராமங்கள். நானாவது சேந்தனாவது போய் உணவு சம்பாதித்துக் கொண்டு வருவோம். உன் விடயம் அப்படியல்ல. நீ ஒருவர் கண்ணிலும் படாமல் பழையாறை போய்ச் சேர வேண்டும் அல்லவா?" "படகில் இளவரசர் இருக்கிறார் என்பதை நீங்களும் மறந்து விடக்கூடாது."

"இந்தப் படகில் இருப்பவர் இளவரசர் என்று யார் நம்புவார்கள்? அதைப்பற்றிக் கவலைப்படாதே! எங்கள் பொறுப்பு. இந்த ஓட்டைப் படகை யாரும் கவனிக்க மாட்டார்கள்." "சரி, அப்படியானால் இங்கேயே நான் இறங்கிக் கொள்கிறேன்."

அச்சமயம் மறுபடியும் அந்த ஓலக்குரல் கேட்டது. "ஆ! அது என்ன?" என்று இளவரசர் கேட்டுவிட்டு மறுபடியும் உணர்வை இழந்தார்.

பூங்குழலி எழுந்து நின்றாள்.

"முடியாது என்னால் முடியாது, இளவரசருக்குத் தெரிந்தால் என்னை மன்னிக்க மாட்டார். இன்னும் கொஞ்ச நேரம் படகில் இரு. அந்த மந்திரவாதியைச் சேற்றிலிருந்து எடுத்து விட்டுவிட்டு வருகிறேன். இங்கிருந்து அந்த இடம் கிட்டத்தான் இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே படகிலிருந்து கால்வாயின் கரையில் குதித்தாள்.

"அப்படியானால் நானும் உன்னோடு வருகிறேன். அந்தப் பாதகனிடம் உன்னைத் தனியாக விடமாட்டேன்" என்றான் சேந்தன் அமுதன்.

"இல்லை, அமுதா! நீ படகில் இரு! இளவரசரைப் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நான் பூங்குழலியுடன் போய் வருகிறேன். எனக்கும் அந்த மந்திரவாதியைப் பார்க்க வேண்டிய காரியம் இருக்கிறது!" என்று சொல்லிவிட்டுப் பூங்குழலியைப் பின் தொடர்ந்து வேகமாக ஓடினான் வந்தியத்தேவன்.

பூங்குழலியின் மனக்கண் முன்னால் மந்திரவாதி மார்பளவு சேற்றில் புதைந்திருக்க, அவனைச் சுற்றி நரிகள் நின்று அவனைப் பிடுங்கித் தின்னப் பார்க்கும் பயங்கரக் காட்சி தோன்றிக் கொண்டிருந்தது. அதற்கிடையே இளவரசர் அவளைப் பார்த்து "பெண்ணே நீ கொலை பாதகி!" என்று குற்றம் சாட்டும் காட்சியும் தோன்றியது! இந்தக் காட்சிகள் அவளுடைய கால்களுக்கு மிக்க விரைவைக் கொடுத்தன. மந்திரவாதியை அமிழ்த்திய சேற்றுப் பள்ளத்தை அதி விரைவில் நெருங்கினாள். அங்கே மந்திரவாதியைக் காணாமல் பெரும் ஏமாற்றம் அடைந்தாள்.

பின் தொடர்ந்து வந்த வந்தியத்தேவன், அவள் பக்கம் நெருங்கியதும் அவள் தயங்கி நிற்பதன் காரணத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். "வேறு ஒரு சேற்றுப் பள்ள மாயிருக்கலாம். கோடிக்கரையில் எத்தனையோ பள்ளங்கள் உண்டு அல்லவா? நீ மறந்து போயிருப்பாய்!" என்றான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## மலைப்பாம்பும் மான்குட்டியும்

(நேற்றைய தொடர்ச்சி...)

குறட்டியை சுமந்தபடியே சென்றது மான்.

மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்றது. நாவற்பழங்களை சேகரித்துக் கொண்டது.

மலைப்பாம்பு தன் உடலைச் சுற்றியிருக்க உற்சாகத்துடன் நடந்தது.

தனது அம்மாவுக்காக தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது இதற்கு சந்தோஷமாக இருந்தது.

மான் தன் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்தது. தன் இருப்பிடத்தையும் படுத்துக்கிடக்கும் அம்மாவையும் காட்டியது.

குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

"நாவற் பழங்களைக் கொடுத்துவிட்டு தப்பிக்கலாம் என்று நினைத்தால். அப்புறம் நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும்" என்றது குறட்டி.

"நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன். என் வார்த்தையை மீறமாட்டேன்" என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடியது மான் குட்டி.

குறட்டி மெல்ல ஊர்ந்து மான்களின் ஊடே மறைந்து கொண்டது.

அங்கு அதற்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினைந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன.

அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும்.

இப்படித்தான் சென்ற வாரம் ஒரு மலைப் பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மாலைப் பாம்பு அங்கேயே உயிரை விட்டது.

பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக் கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது.

"கையில் கிடைத்ததை விட்டு விட்டோமோ?" என்று கூட ஆதங்கமாக இருந்தது.

எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளை சிங்களவர்களே எடுத்து உரைப்பர்

1983 ஜூலைக் கலவரத்துக்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்பதாக நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே நீதியமைச்சர் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டிருந்தார்.

நீதியமைச்சரின் மன்னிப்பு பேசுபடுபொருளாக இருந்த அதேநேரத்தில், பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ; முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்கள் இப்போது பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியிருப்பது தமிழர்களின் பிரதேசத்தில் அல்ல. மாறாக சிங்கள மக்கள் குழுமியிருந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆக, 1983 கறுப்பு ஜூலைக் கலவரத்துக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்பதாக நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் கூற, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொதுநிகழ்வொன்றில் வைத்து, முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்கள் இஸ்ரேல் – பாலஸ்தீனப் போர் தொடர்பில் கதைப்பது வேடிக்கையானதென விமர்சித்துள்வார்.

இதை நாம் கூறும்போது, ஜனாதிபதித் தேர்தல் வரும் காலத்தில் இவ்வாறான உரைகள் இடம்பெறுவது வழக்கம் என்று நீங்கள் கூறலாம்.

கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களின் போது தமிழ் மக்களுக்கு ஆதரவான உரைகள் இடம்பெற்றமை உண்மையே. அதாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பது தொடக்கம் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும் என்பது வரையில், ஜனாதிபதித் தேர்தல்களின்போது உத்தரவாதங்கள் முன்வைக்கப்பட்டன.

அதேநேரம் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இங்கு இடமில்லை என்றும் எமது படையினரைத் தண்டிக்க நாம் ஒருபோதும் உடன்படமாட்டோம் என்ற உரைகளும் அப்போது வெளிக்கிட்டிருந்தன.

ஆனால் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே, தமிழ் மக்களுக்கு இந்த நாட்டின் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் இழைத்த அநீதிகளும் அநியாயங்களும் சிங்களத் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை ஒருபெரும் திருப்புமுனை எனலாம்.

ஆம், 1983 ஜூலைக் கலவரத்துக்காக நீதியமைச்சர் மன்னிப்புக்கேட்க, வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழினப் படுகொலை நடந்தது உண்மை. அங்கு தமிழ் மக்களை அன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் கொன்று குவித்தனர் என்ற உண்மையை இந்த நாட்டின் இன்னொரு சிங்களத் தலைவர் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

ஆக, தமிழ் மக்களுக்கு சிங்களப் பேரினவாதம் இழைத்த கொடுமைகளை சிங்களத் தலைவர்கள் இனி பகிரங்கப்படுத்துவர் என்பது நிறுதிட்டமான உண்மை.

# அரசின் நீதியான நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

அரசின் நீதியான நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

நீதி நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

அதனால்தான் பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் வாதிடுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து எதிர்க்கட்சிகள் பேசுவதில்லை.

பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கம் செய்வதற்கு ஆதரவாகப் பேசுவதன் மூலம் எதிர்க்கட்சிகளின் உண்மையான ஆர்வம் என்னவென தெளிவாகத் தெரிகிறது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ம-7)

## பாண் விலை குறைப்பு தொடர்பில் இன்று அறிவிப்பு

### வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

பாண் விலை குறைப்பு தொடர்பில் இன்று அறிவிக்கவுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாண் விலை குறைப்பு தொடர்பில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதாக அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பாண் விலை குறைப்பு தொடர்பில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வரமுடியாமல் போனதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாணின் விலையை குறைக்க உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அதற்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ அண்மையில் தெரிவித்திருந்தார். இதன்படி, பாண் உள்ளிட்ட வெதுப்பக பொருட்களின் விலைகளைக் குறைப்பது குறித்து வெதுப்பக உற்பத்தியாளர்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எனினும் விலை குறைக்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் இன்று எமக்கு உபதேசம்

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் விசனம்

வங்குரோத்து நாட்டை உருவாக்கியவர்களே இன்று எமக்கு உபதேசம் செய்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசனம் வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"பணக்காரனுக்கு வரிச்சலுகை கொடுத்து நாட்டையே நாசமாக்கியவர்கள் இவர்கள். நாம்செய்த பாவம் திருடர்களுடன் சேர்ந்து நாட்டையே திவாலாக்கிவிட்டதே. அந்த பாவத்திற்கு பங்களிக்கவில்லை என்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

அவர்களின் தீர்மானங்களினால் நாடு ஜனநாயக வரலாற்றில் முதல் தடவையாக வங்குரோத்து நிலைக்குச்சென்றதாகவும் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (ம-7)

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு -கிரான்பாஸ், வதுல்லவத்தைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 31 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## வாகன சாரதிகளுக்கு நிரந்தர அனுமதி அட்டை

*(கொழும்பு)*

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ள வாகன சாரதிகளுக்கு, இவ்வருடம் செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் முதல் நிரந்தர சாரதி அனுமதி அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருந்த வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட வேளையில், சாரதி அனுமதி அட்டைகளை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக நிரந்தர சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை வழங்க முடியாதிருந்ததாக அவர் தெரிவித்தார்.

தற்போது தேவையான சாரதி அனுமதி அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், புதிய சாரதி உரிமம் மற்றும் புதுப்பித்தல்களுக்காகச் சாரதி உரிமங்கள் அச்சிடப்பட வேண்டும் என்றும் நிஷாந்த அனுருந்த வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)

### 3,476 விவசாயக் குடும்பங்களுக்கு

## மானிய முறையில் உர விநியோகம்

நாட்டில் உள்ள 3,476 விவசாயக் குடும்பங்களுக்கு மானிய முறையில் உரம் விநியோகிக்கப்படவுள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி, நாட்டில் உள்ள மூன்று மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டார் தொண்டு நிறுவனம் ஒன்றினால் குறித்த உரத்தொகுதி வழங்கப்படவுள்ளது. (ம-7)

## குருந்தூர்மலை விவகாரம் 6 மாதங்களுக்கு ஒத்திவைப்பு

*(முல்லைத்தீவு)*

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த வருடம் ஜனவரி 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்குடன் தொடர்புடைய முன்னாள் வடமாகாணச் சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்தி தொடர்பில் உலக வங்கியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**பாடசாலைகளில் பௌதீக வளங்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்படும் தொகையை அதிகரிப்பதற்கான யோசனைகள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**



அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் தரத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன பாராளுமன்றத்தில் எழுப்பிய வாய் மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினாலும் மாகாண பாடசாலைகளுக்கு மாகாண கல்வி அமைச்சினாலும் பாடசாலைகளில் தரமான உள்ளீடுகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கல்வி அமைச்சர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் வழங்கப்படும் உதவிகள் ஆசிரியர் பயிற்சி மற்றும் தரமான உள்ளீடுகளுக்கு செலவிடப்படும் எனவும் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டிற்கான தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த வருடம் நிறுவனங்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# இரண்டு வாகனங்கள் மோதி கோர விபத்து இருவர் காயம்



(மொனராகலை)

மொனராகலை சியம்பலாண்டுவ பிரதான வீதியில் தொம்பகஹவெல எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற பயங்கர விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கப்ரக வண்டியும் மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச் சென்ற லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் பின்னர், கப்ரக வண்டியின் சாரதியும் அதில் பயணித்த மற்றுமொரு நபரும் வண்டிக்குள் சிக்கிக் கொண்டதையடுத்து, அருகில் இருந்தவர்கள் இருவரையும் காப்பாற்ற பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு மொனராகலை மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இருவரும் மஹகளுகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பில் லொறியின் சாரதி தொம்பகஹவெல பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3179

**பவிதா**

பெரும்பாலானோரின் பாஸ்போர்ட் எடுத்த நாள் முதல்...



இந்த நாள் வரை... வெளிநாடு சென்றதில்லை...

**நதியா**

முன்னாடி எல்லாம் எப்போ தூங்குவன்னு கேட்டா 10 இல்ல 11 ன்னு சொல்ல முடிஞ்சது
இப்பெல்லாம் நாம எங்க முடிவு பண்றது எல்லாம் கையில இருக்கிற போன் தான் முடிவு பண்ணுது...



**யதுசா**

ஏழு கழுதை வயசானாலும் மிக்சர்ல இருந்து கடலையை பொறுக்கி திங்குற பழக்கம் மட்டும் நம்மளை விட்டு போகவே போகாது.



**சதுராஜ்**

கடவுளே என்ன வாழ்க்கை இது... எனக்கு எப்பத் தான் விடிவு காலம் பிறக்கும்..ஒரே கஷ்டமா இருக்கு...



என்ன இவனுக்கு யோசிக்கெல்லாம் டைம் இருக்கு...இவனுக்கு இன்னொரு பிரச்சினை பார்சல்...


**நந்தீஸ்**

கல்யாணம் பண்ணினா,நமக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம் சரி பண்ண ஒருத்தி வருவான்னு பாத்தா... அவ பண்ற பிரச்சினைய சரி பண்ணவே,இன்னொரு கல்யாணம் பண்ணனும் போல இருக்கே....



**சரத்**

கையிருப்பு குறையும் போது தான் ஒரு பொருளின் அருமை தெரியும்... வயது ஏற ஏறத் தான் வாழ்க்கையின் மதிப்பு புரியும்..



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

முதல் காமினி மகா வித்தியாலயத்திற்கு முன்னால் மன்னார் வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் நிறுவப்படவுள்ளது என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, வெளிச்சுற்று வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள தற்போது பொதுமக்கள் சேவைகளை வழங்கி வரும் பிராந்திய அலுவலகத்தின் உத்தியோகபூர்வக் கடமைகள் 2024 ஓகஸ்ட் மாதம் 02ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும்.

அதற்கமைய, 2024 ஓகஸ்ட் மாதம் 03ஆம் திகதி முதல் 2024 ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி வரையில் இந்த திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலகத்தின் மூலம் பொதுமக்கள் சேவைகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிடப்பட்ட இடத்தில் நிறுவப்படும் புதிய பிராந்திய அலுவலகத்தின் மூலம் 2024 ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி முதல் மீண்டும் பொது மக்கள் சேவைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களக் கட்டுப்பாட்டாளர் நாயகம் விடுத்த ஊடக அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,250)

## தீக்காயங்களுக்...

யைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சரோசதேவி இரஞ்சநாதன் (வயது-57) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்துவரும் நிலையில் கணவனும் மனைவியும் கனடா செல்லத் தயாராக இருந்துள்ளனர்.

வியாபாரத்துக்காகச் சென்ற கணவன் நேற்று முன்தினம் புதன்கிழமை (24) பிற்பகல் வீட்டுக்கு சென்றபோது மனைவி எரிந்த நிலையில் காணப்பட்டுள்ளார். அவரை மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்தபோதும் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பாண் வாங்க...

ழுந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (23) இரவு 7.30 மணியளவில் தட்டாதெருச் சந்தியில் பாண் வாங்கிக் கொண்டு வீதியின் இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாக துவிச்சக்கரவண்டியில் சென்ற போது காங்கேசன்துறை வீதி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி அதிவேகமாகச் சென்ற முச்சக்கர வண்டி துவிச்சக்கர வண்டியை மோதித் தள்ளியது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (24) இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-7,60)

## கட்டுடையில்...

சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

சங்கானை நிச்சாமம் பகுதியைச் சேர்ந்த முகுந்தன் அஜந்தா (வயது-43) என்ற 3 பிள்ளைகளின் தாயே சம்பவ இடத்தில் உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணை வாகனம் மோதியதில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## தமிழ் அரசியல்...

தமிழ் அரசியல் கைதிகளை நினைவு கூர்ந்து நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழில் இடம்பெற்றது.

"வெலிக்கடை சிறைப்படுகொலை" இடம்பெற்ற நாளான நேற்று வியாழக்கிழமை மாலை 3.05 மணிக்கு, யாழ்ப்பாணத்திலுள்ள "தந்தை செல்வா கலையரங்கில்" நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள், முன்னைநாள் அரசியல் கைதிகள், சர்வகட்சி அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவ மற்றும் ஆசிரியர் சமூகத்தினர், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ம-7,33)

## புலிகளைப்...

எமக்கு கிடைத்த பரிசு இதுவே என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாங்கள் முழு ஆதரவை வழங்கினோம். எமக்குப் பொருத்தமில்லாத விடயங்களை அவர் செய்தாலும் இன்று வரை நாங்கள் எதுவும் கூறவில்லை.

ஆனால், கட்சி இரண்டாகப் பிளவுபட்டதுதான் நமக்குக் கிடைத்த பரிசு. எனவே எதிர்காலத்தில் அரசியல் முடிவொன்றை எடுப்போம். ஆனால் ரணிலுக்கு நாங்கள் உண்மையாகவே உதவி செய்தோம். அவர் அதை மொட்டுவுக்கு செய்யவில்லை. அவர் வரும்போதே அது நமக்குத் தெரியும். ஐ.தே.கவை உடைத்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, நல்லாட்சி அரசாங்கம், ஜே.வி.பி உடைந்தது, விடுதலைப் புலிகளும் உடைக்கப்பட்டனர்.

நாங்கள் இன்றும் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி வருகிறோம். இணக்கம் ஏற்பட்டால் அரசாங்கம் ஒன்றை அமைப்பதுதொடர்பில் விவாதிக்க நாங்கள் தயார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ள அனைவருடனும் கலந்துரையாடுவோம். அதன் பின்னரே இறுதி முடிவு எடுப்போம்" என்றார். (ம-7)

## அன...

ஒரு வருடத்தின் பின்னர் நேற்று கைது செய்யப்பட்டார்.

பரந்தன் பகுதியில் உள்ள பெண்ணொருவரே யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அனலைதீவில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கனேடிய தமிழ் குடும்பமொன்றின் மீது வன்முறை கும்பலொன்றுவாள் வெட்டுத் தாக்குதலை நடத்திய துடன், பெருமளவு வெளிநாட்டு நாணயம் மற்றும் பொருட்கள், நகைகள் என்பனவும் கொள்ளையடித்துச் சென்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை பிரதான சந்தேக நபரை தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் ஒரு வருடத்திற்கு பின்னர் குறித்த சம்பவத்தை வெளிநாட்டில் உள்ள ஒருவரின் பணிப்பில் உள்ளூரில் வழிநடத்தியதாக கருதப்படும் பெண் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது கனடாவில் உள்ள ஐயப்பன் கோயிலொன்றின் தலைவர் சொல்லியே தாக்குதல் நடத்தியதாக தெரிவித்தது டன் அதற்குரிய ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் சில குற்றச் சம்பவ வழக்குகளுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் சந்தேக நபர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 48 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் விசாரிக்க நீதவான் அனுமதியளித்தார். (ம-7,33)


மஹஜன சம்பத — திகதி 2024.07.25 — சீட்டிழுப்பு இலக்கம் 5545 — C 7 6 4 8 1 9 — அத சம்பத — C 4 8 1 9 — சீட்டிழுப்பு இலக்கம் 120 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.07.25 — சீட்டிழுப்பு இலக்கம் - 1575 — T 08 52 57 70 T — Double Chance 00260

மெகா பவர் — திகதி 25/07/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1893 — S 07 23 29 30 67 — Double Chance 57395

லக்கி 7 VIP — திகதி 2024.07.25 — சீட்டிழுப்பு இலக்கம் 371 — K 5 6 3 7 2 4 K

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3787 — சீட்டிழுப்பு திகதி 25.07.2024 — I 43 51 66 80 — I 14330

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.25 — சீட்டிழுப்பு இலக்கம் 0854 — ரிஷபம் 17 18 57 61 ரிஷபம் — 21242 — 13

உத்தியோகபூர்வ முடிவுகள் — 25.07.2024 — வெற்றி வாரம் 253 — வர்ணம் மஞ்சள் — O 4 0 3 5 2 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,303,408.00 — 57510 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2519 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 25.07.2024 — தினம் வியாழன் — 46 62 71 73 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 100,809,656.80 — DLB

சனிதா — திகதி 2024.07.25 — வெற்றி வாரம் 4680 — வர்ணம் சிவப்பு — 04 46 54 68 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,292,493.20 — 62923 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4231 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2024.07.25 — தினம் வியாழக்கிழமை — 20 27 29 50 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,437,865.60 — 790033 — DLB

ஜயவிறு — U 14 16 46 57 59 — 1695 — 25.07.2024 வியாழன் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 535,161,253.40 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் : 2345 — சீ.திகதி : 2024.07.25 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,353,868.80 — 17 41 60 68 B — 505258 — DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வங்கி மீதி வசதி**
**(Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்


தொடர்புகளுக்கு:
**074 17 37 684**
(182)



**மாபிள் பதித்து தரப்படும்**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
1 சதுர அடி 75 ரூபா
நிலம் இழுத்து பதிக்க 100 ரூபா
தொடர்புகளுக்கு :
**077 334 1281**
(190)


# 10ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## பெரியதம்பி இராசையா
(புளியங்கூடல்)

தோற்றம்: 12.05.1952
மறைவு: 18.07.2014


அன்பின் திருவுருவே எங்கள் அப்பாவே!
அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்தீர்களே!
எட்டமுடியாத தொலைதூரம் சென்று
பத்து ஆண்டுகள் ஆனாலும்
கலையாத உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காக
வேண்டுகின்றோம்
என்றும் மனைவி, பிள்ளைகள் நாம்

நீங்கா நினைவுகளுடன்...
குடும்பத்தினர்

(191)

# மரண அறிவித்தல்

மலர்வு
1977 - 08 - 10



உதிர்வு
2024 - 07 - 24

## சரவணமுத்து கருணாகரன்

(ஆசிரியர் - யா/ அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி)

பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திரு. சரவணமுத்து கருணாகரன் அவர்கள் (2024.07.24) புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் சஞ்சுளா(ஆசிரியர் - யா/ அச்சுவேலி ஆரம்ப பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் சப்தவி, சகிஷன் ஆகியோரது பாசமிகு தந்தையும் சரவணமுத்து - நல்லபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் கனகாம்பரம் - சாந்தநாயகி தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசேஸ்வரி, தவராசகுமாரி(ஆசிரியை - பலாலி வடக்கு அ.த.க.பா), மகேந்திரநாதன்(ஜேர்மனி), லலிதா(ஜேர்மனி), பழனிகரன்(லண்டன்), சுமதி(அபிவிருத்தி உத்தியோகத்தர்), யசோ, தனீஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சயந்தி, வினோதினி ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (2024.07.28) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அச்சுவேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல் : குடும்பத்தினர்
077 205 7961

(0951)

### வெலிக்கடையில் கொல்லப்பட்ட
# தங்கத்துரை, குட்டிமணி எங்கே புதைக்கப்பட்டனர்
## சபையில் செல்வம் எம்.பி கேள்வி

வெலிக்கடை சிறையில் படு கொலை செய்யப்பட்ட தமிழீழ விடு தலை இயக்கத்தின் தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரின் உடல்கள் எங்கே புதைக்கப்பட்டுள் ளன என்பதனை அரசு வெளிப்படுத்த வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் எம்.பி. யுமான செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் 1983 ஜூலை இனப் படுகொலை தொடர்பில் விசாரணை கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்

பாராளுமன்றத்தில் நேற்று வியா ழக்கிழமை இடம்பெற்ற பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம் மீதான விவா தத்தில் உரையாற்றுகையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

(ம-7)

### யாழ். மாவட்ட செயலகத்தில்
# பிரதேச அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செல வுத்திட்டம் மற்றும் பிரதேச அபிவி ருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ்ப்பாண மாவ ட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங் கம் பிரதீபன் அவர்களின் தலைமை யில் நேற்று யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் இத் திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்காக, திட் டங்களின் முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர், திட்ட மிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதேச செயலா ளர்கள், பிரதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் மற்றும் உத் தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

(ம-7,33)

# நாகர் கோவிலில் விபத்து பெண் ஒருவர் படுகாயம்

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று தடம் புரண்டதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்தி யசாலையில் சிகிச்சை க்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்று வியாழக் கிழமை(25) பிற்பகல் இடம்பெற்ற இச் சம் பவத்தில் நாகர்கோவில், குடாரப்பைச் சேர்ந்த அஜந்தன் சசிகலா (வயது- 30) என்பவர் படு காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மருத ங்கேணிப் பொலி ஸார் விசாரணை களை மேற்கொ ண்டுள்ளனர்.

(ம-7,60)


**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
**1%**
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்பு : **075 033 6759**
(187)



**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0859)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



**வேலையாட்கள் தேவை**

கொடிகாமம் நகரில் இயங்குகின்ற கிசோர் Multy Shop(fancy Shop) இற்கு அனுபவமுள்ள ஆண்,பெண் வேலையாட்கள் தேவை.

**077 811 8948**
(192)



**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0859)



அனைத்து நாடுகளுக்குமான
**விமான பயணச்சீட்டுக்கள்**
குறைந்த விலையில்
- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241
(C-0859)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org